வேலூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3021/ஆ1/2023 நாள்.20.07.2023

| | | |
|---|---|---|
| பொருள் | : | பள்ளிக்கல்வி - மாநில நல்லாசிரியர் விருது 2023-24ம் கல்வியாண்டில் சிறப்பாக பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது 05.09.2023 அன்று வழங்கிட எதுவாக தகுதி வாய்ந்த அனைத்து வகை ஆசிரியர்களை தேர்வு செய்து அவர்கள் சார்பான கருத்துருக்கள் இரண்டு நகல்களில் அனுப்ப கோருதல் - தொடர்பாக. |
| பார்வை | : | தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.46500/ஐ/2023 நாள். 14.07.2023. |

&&&&&

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி 2023-24ம் கல்வியாண்டில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். இராதாகிருஷ்ணன்ன அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ம் நாள் பள்ளிக்கல்வி துறையின் சார்பாக ஆசிரியர் தின விழாவாகக் கொண்டாடப்பட்டு அவ்விழாவில் அனைத்து வகை பள்ளிகளிலும் சிறப்பாக பணிபுரியும் ஆசிரியர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருதான டாக்டர் இராதா கிருஷ்ணன் விருது வழங்கப்பட்டு வருகிறது.

எனவே உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக்கல்வி) வாயிலாகவும், தொடக்கக்கல்வியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) வாயிலாக பரிந்துரை செய்து அனுப்படவேண்டும். மேலும் தனியார் பள்ளிகள் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) வாயிலாக பரிந்துரை செய்து அனுப்பப்படவேண்டும்,

2023-24ம் கல்வியாண்டிற்கான டாக்டர். இராதா கிருஷ்ணன் விருது பெற தகுதி வாய்ந்த அனைத்து வகை ஆசிரியர்கள் சார்பாக கருத்துருக்கள் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 05.08.2023க்குள் வேலூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

டாக்டர், இராதாகிருஷ்ணன் விருது பெற பள்ளியிலிருந்து பெறப்படும் கருத்துருக்களை இரண்டு நகல்களில் அனுப்பப்படவேண்டும்.

இணைப்பு- உரிய படிவம்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் -9.

பெறுநர்

தலைமையாசிரியர்கள்,
உயர்/மேல்நிலைப்பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்- மாவட்டக் கல்வி அலுவலர்கள், இடைநிலைக்கல்வி/தொடக்கக்கல்வி/ தனியார் பள்ளிகள் வேலூர் மாவட்டம். தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு

நகல்- வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
வேலூர் மாவட்டம்.